**STC.1183/2025** Date:19.02.2026

Page No.

**அ.சா.1 ஈஸ்வரன் த/பெ. அப்பாவுக்கவுண்டர்** வயது.70

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–(எதிரிகள் ஆஜர்)</u>**

போலீசார் என்னை பகல் 02.00 மணியளவில் விசாரித்த போது, எதிரிகள் மருத்தவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் சரியல்ல, என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்து 10 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் புகார் அளித்ததால், என் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் மருத்தவமனைக்கு செல்வதற்கு 2 மணி நேரம் முன்பு சம்பவம் நடந்தது. காவல் நிலையத்தில் நான் அளித்த புகாரில் 02.00 மணியளவில் சம்பவம் நடந்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் நேரம் முன்ன பின்ன இருக்கலாம். போலீசார் சம்பவம் நடந்த பின்னர் மருத்தவமனையிலும் வந்து என்னை விசாரித்தார்கள். அது சம்பந்தமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். காவல் துறையினர் எழுதியுள்ள புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, என்னை யார் அடித்தார்கள் என்று நான் கூறியதை எழுதினார்கள். நானும் என் தம்பியும் தான் எதிரிகளை தாக்கி விட்டு அதிலிருந்து தப்பிக்க இந்த பொய் புகாரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,

Tirupathur.